**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.1252/2022**
**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெகநாதன் | Caste | : |
| Father 's Name / Husband Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(09.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது திருப்பூரில் குடியிருந்து வருகிறேன். நான் அங்காளம்மன் டிரான்ஸ்போர்ட் வைத்து தொழில் செய்து வருகிறேன்.கடந்த 18.08.2020ம் தேதி TN 56 J 8146 என்ற பதிவு எண் கொண்ட ஈச்சர் வாகனத்தை டிரைவர் வினோத் திருப்பூரில் இருந்து தூத்துக்குடி செல்வதற்காக வந்து கொண்டிருந்த போது 18ம் தேதி அதிகாலை 3 மணிக்கு ஆம்புலன்சு டிரைவர் எனக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு கப்பலூர் சிட்கோ SBI வங்கி அருகே அவருக்கு முன்னால் சென்ற TN 69 BE 8227 பதிவு எண் கொண்ட லாரியை திடிரென்று நிறுத்திவிட்டதால் பின்னால் வினோத் சென்ற வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதில் வினோத்திற்கு தலை, இடதுகால், ஆகிய இடங்களில் பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் காதில் இரத்தம் வந்ததும் என்றும் அவரை மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்கிறோம் என்றும் அங்கு வரும் படியும் கூறினார். நான் நேரடியாக மருத்துவமனைக்கும் பின்பு அடிபட்ட இடத்திற்கும் சென்று பார்த்துவிட்டு காவல் நிலையம் சென்று புகார்

அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள புகார்தாரர் கையெழுத்தும் என்னுடையது தான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. லாரியை ஓட்டி வந்த நபர் மாரியப்பன் என்று தெரிந்து கொண்டேன். ஆஜர் எதிரியை அன்றைய தினம் மருத்துவமனையில் பார்த்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.ஆ–1 புகாரில் உள்ள விபரங்கள் நான் தான் எழுதினேன். புகாரில் ஆம்புலன்சு டிரைவர் என்னிடம் விபத்தை பற்றி சொல்லியதை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்தது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது டிரைவர் வினோத் கனரக ஓட்டுனர் உரிமம் வைத்திருந்தார் என்றால் சரிதான். வினோத் வயது 24 மற்றும் அவர் என்ன படித்துள்ளார் என்றால் 10 ம் வகுப்பு படித்துள்ளார். இறந்துபோனவர் ஓட்டி வந்த வாகனத்துக்கு சேதாரம் அவரது வண்டியின் முன்பகுதியில் உள்ளது என்றால் சரிதான். எனக்கு தகவல் கிடைத்தது 3 மணிக்கு. ஒவ்வொரு வாகனத்துக்கும் இடையில் குறைந்தபட்சம் 10 அடி இடைவெளி விட்டு வாகனங்களை இயக்க வேண்டும் என்று விதி என்றால் சரிதான். நான் விபத்து நடந்த இடத்திற்கு 6.30 மணிக்கு வந்தேன். எதிரியின் வாகனம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நின்று கொண்டிருந்தது என்றால் சரிதான். வாகனம் ரோட்டுக்கு கீழ் நின்றது என்று சொன்னால் ரோட்டில் தான் நின்றது. நான் பார்க்கும் போது எந்தவிதமான டிராபிக் இல்லாமல் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வாகனங்கள் சென்று கொண்டிருந்தது. நான் பார்க்கும் போது எதிரியின் வாகனம் முன்பக்க டயர் பஞ்சராகி நின்றது என்றால் பஞ்சராகவில்லை. வினோத் என்பவர் தூக்கக்கலக்கத்தில் வாகனத்தை ஓட்டி எதிரியின் வாகனத்தில் மோதி காயங்களை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றும் வாகன இழப்பீடு கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நின்று கொண்டிருந்த வாகனத்தில் வினோத் என்பவர் மோதி காயங்களை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. அவர் ஏற்படுத்திய காயங்களால் மரணம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை